
# தமிழ் கற்பித்தல்

**பருவம் - 1** **தாள் -1**

## அலகு 1 செவ்வியல் இலக்கியங்கள் - அறிமுகம்

உலகின் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு மனித இனக்குழுக்கள் தோன்றி ஒருவருக்கொருவர் எவ்விதத் தொடர்பும் இன்றிக் காடுகளிலும் மலைகளிலும் அலைந்து திரிந்த நிலையில் அவர்கள் தோன்றிய சூழலுக்கேற்பக் கருத்துப்பரிமாற்றம் மேற்கொள்ள பல மொழிகள் தோன்றலாயின. இன்றைய உலகில் 7000க்கும் அதிகமான மொழிகள் பேசப்படுகின்றன. உலகில் காணப்படும் மொழிகளை அமைப்பின் அடிப்படையில் மூன்றாக வகைப்படுத்துவர். அவை பின்வருமாறு




## உலக மொழிக்குடும்பங்கள்

உலக மொழிகளை இன அடிப்படையில் பல்வேறு மொழியினங்களாக வகைப்படுத்துவர். அவை

- இந்தோ-ஐரோப்பிய மொழிகள்
- சைனோ திபெத்திய மொழிகள்
- செமிட்டோ யெமிட்டிக் மொழிகள்
- உராலிக் மொழிகள்
- அல்டய் மொழிகள்

- திராவிட மொழிகள்
- ஆப்பிரிக்க மொழிகள்
- மலாயோ பாலினேசியன் மொழிகள்
- அமெரிக்க இந்திய மொழிகள்
- ஆஸ்திரோ ஆசிய மொழிகள்

## இந்திய மொழிக்குடும்பங்கள்

இந்தியாவில் 1650க்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்புடுகின்றன. இந்திய மொழிக்குடும்பங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்

- இந்தோ ஆரிய மொழிகள்
- ஆதிரோ ஆசிய மொழிகள்
- திராவிட மொழிகள்
- சைனோ திபெத்திய மொழிகள்

## செவ்வியல் - விளக்கம்

செவ்வியல் என்பதன் மூலச்சொல் **“ கிளாசிக்கல்“** ( clasicus) என்ற இலத்தீன் மொழிச்சொல்லிலிருந்து தோன்றியதாகும். தமிழில் செவ்வியல் என்பதன் மூலச்சொல் செம்மை என்பதாகும். செம்மை + இயல் என்ற இரு சொற்கள் இணைந்து கெவ்வியல் என்றானது.

தமிழ் மொழி அகராதியில், **‘செம்மை’** என்பதற்குச் ‘செப்பம்’, ‘செவ்வை’ நற்சீரடைதல் ஒழுங்குபடுத்துதல் (செம்மை செய்தல்) என்ற பொருள்களும், தமிழ் பேரகராதியில், ‘பெருமை, நேர்மை, ஓர்மை, சுத்தம், அழகு ஆகிய பொருள்களும் காணப்படுகின்றன. பொதுவாக செவ்வியல் என்பது தொன்மை வாய்ந்ததாய் உயர்ந்ததாய் செம்மை மிக்கதாய் காணப்படும் கலைகளையும் இலக்கியங்களையும் உள்ளடக்கியது.

## செம்மொழிக்குரிய தகுதிகள்

ஒரு மொழியைச் செம்மொழியாக ஏற்க அதற்கு மொழியியல் அடிப்படையில் 11 **தகுதிகள்** இருந்திடல் வேண்டும். அவை தொன்மை, தனித்தன்மை, , பொதுமைப்பண்பு, நடுவுநிலைமை, தாய்மைத்தன்மை, பண்பாடு கலை பட்டறிவு வெளிப்பாடு, பிற மொழித் தாக்கமில்லாத் தனித்தன்மை, இலக்கிய வளம் , உயர்சிந்தனை, கலை இலக்கியத் தன்மை, மொழிக்கோட்பாடு ஆகியனவாகும்

.



## செவ்வியல் இலக்கியங்கள்

தமிழ் செவ்வியல் நூல்களின் எண்ணிக்கை 41 ஆகும். அவை

- பதினெண் மேற்கணக்கு நூல்கள் - 18
- பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் - 18
- தொல்காப்பியம் - 1
- இரட்டைக்காப்பியங்கள் - 2
- முத்தொள்ளாயிரம் - 1
- இறையனார் களவியலுரை - 1

ஆகியனவாகும்

## சங்க இலக்கியங்கள்

ஒரு நாட்டின் வரலாற்றைக் கல்வெட்டுகள், நாணயங்கள், இலக்கியங்கள் ஆகியவற்றின் வாயிலாக அறியலாம். உலகத்தின் மூத்த மொழியாகிய தமிழின் தொன்மைக்குச் சாட்சியங்களாக இருப்பவை சங்க இலக்கிய நூல்களாகும். தமிழ்நாட்டு வரலாற்றை அறியப் புறநானூறு. பதிற்றுப்பத்து, பத்துப்பாட்டு ஆகிய சங்க நூல்கள் பெரிதும் உதவுகின்றன. சங்க இலக்கிய பாடல்கள் ஒரே காலத்தைச் சார்ந்தவை அல்ல. அவை வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு புலவர்களால் பல்வேறு இடங்களில் பாடப் பெற்றவையாகும். சங்க இலக்கியங்கள் எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் ஆகும்

## எட்டுத்தொகை நூல்கள்

எட்டுத்தொகை நூல்களைப் பின்வரும் வெண்பா பட்டியலிட்டுக் காட்டுகிறது.

நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு

ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பாபாடல்

கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று

இத்திறத்த எட்டுத் தொகை”

| எட்டுத்தொகை | | | | | |
|---|---|---|---|---|---|
| வ.எண் | நூற்பெயர் | பொருள் | பாடல்கள் | ஆசிரியர்கள் | அடி அளவு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | நற்றிணை | அகம் | 400 | 175 | 9-12 |
| 2 | குறுந்தொகை | அகம் | 400 | 205 | 4-8 |
| 3 | ஐங்குறுநூறு | அகம் | 500 | 5 | 3-6 |
| 4 | அகநானூறு | அகம் | 400 | 145 | 13-31 |
| 5 | கலித்தொகை | அகம் | 149 | 5 | 11-80 |
| 6 | புறநானூறு | புறம் | 400 | 160 | 4-40 |
| 7 | புதிற்றுப்பத்து | புறம் | 80 | 10 | 8-57 |
| 8 | பரிபாடல் | அகமும் புறமும் | 22 | 18 | 25-400 |

## நற்றிணை

நற்றிணை = நன்மை + திணை , நல் + திணை

**175** புலவர்களால் பாடப்பெற்ற **400** அகப்பாடல்களைக் கொண்டது. இதனைத் தொகுத்தவர் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி). நற்றிணைப் பாடல்கள் **9** அடி முதல் **12** அடி வரையில் அமைந்திருக்கின்றன. தமிழரின் வளமார்ந்த அன்பு வாழ்க்கையை இந்நூற் பாடல்கள் நயம்படக் கூறுகின்றன. இந்நூலுக்குப் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் உரை வகுத்துள்ளார். நற்றிணைப் பாடல்கள் உவமை நலம் மிக்கவை.

உண்மையான செல்வத்தை இந்நூற் பாட்டு ஒன்று விளக்குகிறது.

“சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்

புண்கண் அஞ்சும் பண்மண்

மென்கட் செல்வம் செல்வம் என்பதுவே” (மிளைக்கிழான் நல்வேட்டனார் -210)

தம்மைச் சார்ந்திருப்பவர் துன்பத்தைத் துடைப்பதே அக்காலச் சான்றோாகள் பெரும் செல்வமாகக் கருதினர்.

செல்வக் குடியில் பிறந்த பெண், தான் புகுந்த இடத்தில் காணும் வறுமையைப் போக்க, தாய் வீட்டை நாடுதல் இல்லை என்னும் சீரிய பண்பைக் கூறுகிறது பின்வரும் அடிகள்.

“கொண்ட கொழுநன் குடிவறன் உறிறெனக்

கொடுத்த தாதை கொடுஞ்சோ றுள்ளான்” ( போதனார் -110)

“முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்

நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்” ( ஆசிரியர் தெரியவில்லை – 355)

### குறுந்தொகை

குறுந்தொகை = குறுமை + தொகை

“நல்ல” எனும் அடைமொழி இந்நூலின் சிறப்பை அறிவிக்கின்றது. **4** அடி சிற்றெல்லையும், **8** அடிப்பேரெல்லையும் கொண்ட **நானூறு** பாக்களை உடையது இந்நூல். இந்நூல் 402 அகப்பாடல்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் 9 அடி கொண்ட இரு பாடல்கள் (307, 891) உள்ளன. இந்நூலைத் தொகுத்தவர் பூரிக்கோ. இந்நூல் முழுமைக்கும் உ.வே.சா உரை எழுதியுள்ளார். பாரதம் பாடிய பெருந்தேவனார். இந்நூலுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார்.

குறுந்தொகையில் வரும் உவமைகள் சிறந்தவை. இந்நூல் பாடல்களைப் பாடிய புலவர்களின் பெயர் தெரியவில்லை. ஆகவே, அப்புலவர்கள் பாடிய பாட்டில் காணும் அழகான தொடராலேயே அவர்கள் பெயர் பெறலாயினர். மீனெறி துன்புலார், செம்புலப் பெயல் நீரார் குப்பைக்கோழியார், கயமனார், நெடுவெண்ணிலவினார். விட்ட குதிரையார், ஒரேருழவனார் போன்ற பெயர்கள் அவ்வாறு அமைந்தவையே.

இந்நூல் வாயிலாகப் பண்டைத் தமிழரின் இல்வாழ்க்கை, ஒழுக்கம், மகளிர் மாண்பு, அறவுணர்வு முதலியவற்றை அறியலாம்.

“செம்புலப் பெயல்நீர் போல ”

அன்புடை நெஞ்சம் தாங் கலந்தனவே” (செம்புல பெயநீரார் 40)

என்ற பாடலில் காதல் உள்ளம் தகுந்த உவமையால் போற்றப்படுகிறது.

குப்பை கோழித் தனிப்போர் போல (குப்பைக்கோழியார் - 305)

என வரும் பாடலில் குப்பை மேடுகளில் திரியும் கோழிகளைச் சண்டைக்கு விடுவார்கள், விலக்குவார்கள். அவை இறுதிவரை சண்டையிட்டு இறந்தொழியும். தன் காதல் நிலையும் அது போன்றதே என்கின்றாள் தலைவி.

“கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி

காமம் செப்பாக கண்டது மொழிமோ” (இறையனார் 2)

“வினையே ஆடவர்க்கு உயிரே வாள்நுதல்

மனை உரை மகளிர்க்கு ஆடவர் உயிரே”         (பாலை பாடிய பெருங்கடுங்கோ 135)

போன்றவை எல்லாராலும் அறியப்படும் பாடல்களாகும்

**ஐங்குறுநூறு:**

ஐங்குநுறூறு = ஐந்து + குறுமை + நூறு

திணை ஒன்றுக்கு நூறு பாடல்கள் வீதம் ஐந்திணைக்கும் **500** பாடல்களையுடையது இந்நூல். இந்நூல் பாடல்கள் **3 அடி முதல் 6 அடி** வரையில் அமைந்துள்ளன. இதனைத் தொகுத்தவர் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார் தொகுப்பித்தவன் யானைக் கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடியுள்ளார். இந்திர விழா குறித்து கூறும் தொகை நூல் ஐங்குறுநூறு. இந்நூல் ஐந்து புலவர்கள் பாடிய நூலாகும்

.

| பாடல்கள் | ஆசிரியர்கள் |
|---|---|
| **குறிஞ்சி திணை** | கபிலர் |
| **முல்லை திணை** | பேயனார் |
| **மருதம் திணை** | ஓரம் போகியார் |
| **நெய்தல் திணை** | அம்மூவனார் |
| **பாலை திணை** | ஓதலாந்தையார் |

இந்நூலை முதன் முதலாகப் பதிப்பித்தவர் உ.வே. சாமிநாதையர்

தன் மகள் தலைவனுடன் சென்றதை அறிந்த தாய் அவளைத் தேடிவருமாறு பலரையும் போக்கினாள். தன் அருமை மகளை விட்டு ஒரு நாளும் பிரியாத தாய் பின்வருமாறு பாடுகிறாள்.

“இதுவென் பாவைக்கு இனிய நன்பாவை

இதுவென் பைங்கிளி எடுத்த பைங்கிளி என்றிவை”

இதுவென் பூவைக்கு இனியசொற் பூவை

“அலமரு நோக்கின் நலம்வரும் சுடர்நுதல் ”         ( ஓதலாந்தையார் - 375)

“விளைக வயலே வருக இரவலர்

என வேட்டோய் யாயே”         (ஓரம்போகியார் 2)

அன்பின் நெகிழ்ச்சிகளைக் கூறும் பல பாடல்களை இந்நூலுள் கண்டு இன்புறலாம்.

## கலித்தொகை

**150** கலிப்பாக்களைக் கொண்ட அகப்பொருள் பற்றிய நூல் இதுவாகும். இது நாடகப் பாங்கில் அமைந்துள்ளது. இசையோடு பாடுவதற்கேற்றது. கலித்தொகை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐம்பெரும்பிரிவுகளை உடையது. கலிப்பா துள்ளல் ஓசையைக் கொண்டது.

இந்நூலின் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் நல்லத்துவனார். காதலன் உறுதியையும், நிலையான உண்மைகளையும், இந்நூல் எடுத்துரைக்கிறது. கலித்தொகையைத் தொகுத்தவர் நெய்தல் கலியைப் பாடிய நல்லாந்துவனார். இந்நூல் கற்றறிந்தார் ஏத்தும் கலி என்று சிறப்பிக்கப்படுகிறது.

| திணைகள் | ஆசிரியர்கள் | பாடல்கள் |
|---|---|---|
| **குறிஞ்சித் திணை** | கபிலர் | 29 |
| **முல்லைத் திணை** | சோழன் நல்லுருத்திறன் | 17 |
| **மருதத் திணை** | மருதனிள நாகனார் | 35 |
| **நெய்தல் திணை** | நல்லந்துவனார் | 33 |
| **புாலைத் திணை** | பெருங்கடுங்கோ | 35 |

கலித்தொகைக்கு உரை எழுதியவர் நச்சினார்க்கினியர். கலித்தொகையுள் பாண்டியரைத் தவிர மற்ற மன்னர்கள் பற்றிய குறிப்பில்லை. தமிழரின் வீர விளையாட்டான ஏறு தழுவுதல் பற்றி கூறுகிறது இந்நூல்.

பண்பு, அன்பு, அறிவு ஆகியவற்றைப் பற்றி இந்நூல் குறிப்பிடும் போது

,

“பண்பெனப் படுவது பாடறிந் தொழுகல்

அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை

அறிவெனப் படுவது பேதையார் சொல் நோன்றல்”

(நல்லந்துவனார் 133 )

என மாண்புற விளக்குகிறது

**அகநானூறு:**

அகநானூறு = அகம் + நான்கு + நூறு

அகப்பொருள் பற்றிய **நானூறு** பாடல்களை கொண்ட நூலதலின் அகநானூறு எனப் பெயர் பெற்றது. **13 அடி** சிற்றெல்லையையும் **31 அடி** பேரெல்லையையும், உடையது. ஆசிரியப்பாவால் அமைந்த நூலாகும். இந்நூலைத் தொகுத்தவர் உருத்திர சன்மனார், தொகுப்பித்தவன் பாண்டிய உக்கிரப் பெருவழுதி. இந்நூலின் கடவுள் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் ஆவார்.

அகப்பொருள் நூல்கள் தமிழில் பல இருப்பினும் ‘அகம்’ என்றே பெயர் அமைந்த பழந்தமிம் இலக்கிய நூல் இது மட்டுமேயாகும். இந்நூலுக்கு நெடுத்தொகை என்னும் பெயரும் உண்டு.

அகநானூறு மூன்று பகுதிகளாக உள்ளது. அவை களிற்றுயானை நிரை (120), மணிமிடை பவளம் (180), நித்திலக் கோவை (100). ஓர் ஒழுங்கு முறையில் தொகுக்கப்பட்ட ஓரே தொகை, அகநானூறு, அவ்வொழுங்கு முறை வருமாறு.

| பாடல் | திணை | மொத்தம் |
|---|---|---|
| 1, 3, 5, 7,…. | பாலை | 200 |
| 2, 8, 12, 18,…. | குறிஞ்சி | 80 |
| 4, 14, 24,…. | முல்லை | 40 |
| 6, 16, 26,…. | மருதம் | 40 |
| 10, 20, 80,…. | நெய்தல் | 40 |

று. சங்க இலக்கியத்துள் வரலாற்றுச் செய்திகளை மிக அதிக அளவில் கூறும் நூல், அகநானூறு. குடவோலைத் தேர்தல் குறித்துக் கூறுகிறது அகநானூறு.

வடநாட்டுச் செய்திகள் (நந்தர்கள், மோரியர் படையெடுப்பு, மோரியர்க்கு வடுகர் துணை) கூறுகிறது.

"பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தார்

சீர்மிகு பாலிக் குழீஇக் கங்கை

நீர் முதல் கரந்த நதியும் கொல்லோ"

(மாமூலனார் - 265)

நந்தன் வெறுக்னை எய்தினும் மற்றவண்

தங்கலர் வாழி தோழி (மாமூலனார் - 251)

**பரிபாடல்:**

பரிபாடல் என்பது தொல்காப்பியர் கூறும் பாவகை பெற்ற நூலினுள் ஒன்று. ஒரு வெண்பாவாகி வருதலின்றிப் பல உறுப்புகளுடன் தொடர்ந்து ஒரு பாட்டாக முற்றுப் பெறுவது பரிபாடல். பலவகையால் பெயர் பெற்ற ஓரே நூல் இதுவாகும். இது தமிழில் முதல் இசைப்பாடல் ஆகும். இது பாண்டிய நாட்டைச் சிறப்பிக்க பாடப்பட்ட நூலாகும். எட்டுத் தொகை நூல்களுள் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கையும் கூறும் நூல்.

திருமால் பற்றியும், முருகனைப் பற்றியும், வையை ஆற்றைப் பற்றியும் இந்நூல் புகழ்ந்து பாடுகின்றது.

"திருமாற்கு இரு நான்கு, செவ்வேட்டு முப்பத்து

ஒரு பாட்டு, காடுகிழாட்கு ஒன்று – மருவினிய

வையை இருபத்தாறு, மாமதுரை நான்கென்ப

செய்ய பரிபாடல் திறம்." ( ஆசிரியர் இல்லை -13)

இந்நூல் **70** பாடல்களைக் கொண்டுள்ளது. இப்பொழுது கிடைத்துள்ள பரிபாடலின் **22** பாடல்கள் மட்டுமே உள்ளன. இதில் உள்ள பாடல்கள் எண்ணிக்கை

- ❖ திருமால் 6
- ❖ முருகன் 8
- ❖ வையை 8

நாடக வழக்கிற்கு எடுத்துக்காட்டாகப் பரிபாடலையும் கலித்தொகையையும் தொல்காப்பியர் எடுத்துக்காட்டுகிறார்.

“கலியே பரிபாட்டு ஆயிருபாவினும்

உரியதாகும் என்மனார் புலவர்” ( தொல்காப்பியம்: அகத்திணை: 53)

இதனால் பரிபாடல் தொல்காப்பியத்திற்கும் முற்பட்டது என அறிய முடிகிறது. வையைப் பற்றிய பாடல்கள் அகம் சார்ந்தவை கடவுள் வாழ்த்துப் பற்றிய பாடல்கள் புறம் சார்ந்தவை. இந்நூலுக்கு உரை எழுதியவர் பரிமேலழகர்.

“பொன்னும் பொருளும் போகமும் அல்ல. நின்பால்

அருளும் அன்பும் அறனும் மூன்றும்

உருளினர்க் கடம்பின் ஒலிதா ராயே!” (கண்ணன் நாகனார் 80)

**புறநானூறு:**

புறநானூறு = புறம் + நான்கு + நூறு

புறப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்ட நூலதலின் புறநானூறு எனப் பெயர் பெற்றது. இந்நூல் பல்வேறு காலத்தில் வாழ்ந்த பல்வேறு புலவர்கள் பாடிய பாடலின் தொகுப்பாகும். இந்நூலைத் தொகுத்தவர், தொகுப்பித்தவர் யார் என தெரியவில்லை. பண்டைத் தமிழகத்தைப் பற்றி அறிய விரும்புவோர்க்கு இந்நூலே மிக்க உதவி செய்கிறது. பழந்தமிழ் மன்னரின் வீரம், கொடை, புகழ் ஆகியவற்றையும், மக்களின் வாழ்வியலையும் இந்நூல் விளக்குகிறது.

புறம், புறப்பாட்டு, புறம்பு தமிழ்க் கருவூலம் என்ற வேறு பெயர்களும் உண்டு. இந்நூலின் கடவுள் வாழ்த்து பாடலைப் பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடியுள்ளார்.

அறம், பொருள், வீடு என்ற மூன்றையும் பாடும் நூல் புறநானூறு. முடியுடை வேந்தர்கள், குறுநில மன்னர்கள், கடையெழு வள்ளல்கள், புலவர்கள் ஆகிய இவர்களுடைய வரலாறுகளை இந்நூல் குறிப்பிடுகிறது.

தமிழரின் உயரிய வாழ்வியல் சிந்தனைகளைக் கருவூலமாகக் கொண்டு விளங்குவது இந்நூல். புறநானூற்றின்கண் 11 புறத்திணைகளும் 65 துறைகளும் உள்ளன.

“

வீரம் புறவாழ்வின் சிறந்து ஓங்கியது. மன்னர்கள் போர்களம் சென்று இறுதிவரைப் போரிட்டு வெற்றி பெறுவர் அல்லது இறப்பர். மன்னர்தம் இவ்வீரம் மக்களிடையே பரவி இருந்தது. தாய் தன் மகன்

போரில் வெற்றி பெற்றுச் சிறக்க வேண்டும் என விரும்பினான். பொன்முடியார் பாட்டு இதற்குச் சான்று பகரும

ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே

சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே

வேல்வடித்துக் கொடுத்தல் வேந்தற்குக் கடனே

களிறுஎறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே” (பொன்முடியார் 312)

தமிழரின் தனிப்பண்பு விருந்தோம்பல். தம்மை நாடி வருவோர்க்கு உணவு கொடுத்து இன்புறுத்தி தானும் இன்புற்று வாழ்ந்தார்கள்

“உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே” (குட புலவியனார் 18)

பண்டைத் தமிழரின் இனப் பாகுபாடு அவரவர் செய்த தொழில்களின் தன்மையையொட்டி அமைந்திருந்தது. உழவர், தச்சர், வணிகர், வேட்டுவர், ஆயர் மதலிய இனப்பெயர்கள் காணப்படுகின்றன. திருமால், முருகன் முதலிய தெய்வங்களை மிகுதியாக வழிபட்டனர் தமிழர். தமிழரின் உயரிய கொள்கைகளை பின்வரும் பாடல் வரிகள் எடுத்துக்கின்றன.

“யாதும் ஊரே யாவரும் கேளிர்

தீதும் நன்றும் பிறர்தரவ வாரா (கணியன் பூங்குன்றனார் 192)

உண்பது நாழி உடுப்பவை இரண்டே

பிறவும் எல்லாம் ஓர் ஒக்குமே (மதுரை கணக்காயனார் மகனார் நக்கீரனார் 189)

## பதிற்றுப் பத்து

பதிற்றுப்பத்து = பத்து + பத்து = பத்து + இன் + இற்று + பத்து

பத்துப்பத்து என்பது பதிற்றுப்பத்தின் பொருள். புத்துச் சேர மன்னர்களைப் பற்றிப் பத்துப் புலவர்கள் பாடிய பத்துப் பத்துப் பாடல்களின் தொகுதியே பதிற்றுப்பத்து என்று பெயர் பெற்றது. இந்நூலை தொகுத்தாரும், தொகுப்பித்தவரும் யார் என அறியப்படவில்லை. இந்நூல் சேர மன்னர்களை மட்டுமே பாராட்டுகிறது.

இந்நூலின் முதல் பத்தும் இறுதிப் பத்தும் கிடைக்கவில்லை. இந்நூல், பழங்காலத் தமிழக மக்களைப் பற்றியும் சேர மன்னர்களைப் பற்றியும் அறிந்து கொள்வதற்குப் பெரிதும் துணைபுரிகிறது.

| புதிற்றுப்பத்து | | | |
|---|---|---|---|
| பத்து | பாடப்பட்டோர் | பாடியோர் | பரிசுகள் |
| இரண்டாம் பத்து | இமய வரம்பன் நெடுஞ்சேரலாதன் | குமட்டூர் கண்ணனார் | உம்பர்காட்டு ஐந்நூறு ஊர்களையும்,38ஆண்டுகள் தென்னாட்டு வருவாயில் ஒரு பகுதி |
| மூன்றாம் பத்து | பல்யானைச் செல்கெழுகுட்டுவன் | பாலைக் கௌதமனார் | 10 பெரும் வேள்விகள் செய்து புலவரையும் அவர் மனைவியையும் துறக்கம் புதுவித்தாள் |
| நான்காம் பத்து | களங்காயக் கண்ணி நார் முடிச் சேரல் | காப்பியாற்றுக் காப்பியனார் | 40 நூறாயிரம் பொன்னும், நாட்டின் ஒரு பகுதியும் |
| ஐந்தாம் பத்து | கடற்பிறக்கோட்டின் செங்குட்டுவன் | பரணர் | உம்பர்காட்டு வருவாயும், அரசன் மகன் குட்டுவன் சேரலையும் பரிசாக பெற்றனர். |
| ஆறாம் பத்து | ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் | காக்கைப் பாடினியார் | ஒன்பது துலாம் பொன்னும் நூறாயிரம் பொற்காசையும், மலைமீது நின்று கண்ணிற் கண்ட நாட்டையும் பரிசாக பெற்றார். |
| ஏழாம் பத்து | செல்வக் கடுங்கோவாழியாதன் | கபிலர் | நூறாயிரம் காணம் பெற்றார். |
| எட்டாம் பத்து | தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை | அரிசில் கிழார் | 9 ஆயிரம் பொற்காசும், அரசு உரிமையையும் பெற்றார். |
| ஒன்பதாம் பத்து | குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை | பெருங்குன்றூர்க் கிழார் | 32 ஆயிரம் பொற்காசும், மனையும், பல கலன்களும் பெற்றார். |

சேர மன்னர்களுடைய காட்டுவளம், கொடை மக்கள் வாழ்க்கை, படைத்திறன், மனைமாட்சி முதலியவற்றை இந்நூலால் அறியலாம்.

**நாட்டு வளம்:**

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நான்கு நிலத்துப் பொருள்களும் மிகுதியாக விளைந்து சேரநாடு வளம்மிக்கு விளங்கிய செய்தியைப் பின்வரும் வரிகள் உணர்த்தும்.

"கடலவும் கல்லவும் யாற்றவும் பிறவும்

வளம்பல நிகழ்தரு நனந்தலை நன்னாட்டு

விழவு அறுபறியா முழவுமிழ் மூதூர்." (குமட்டூர் கண்ணனார் 11 )

நான்கு நிலங்களில் விளைந்த பொருளேயன்றி வெளிபாட்டுப் பொருள்களும் சேர நாட்டிற்கு வந்திருந்த செய்தியை 'கடலவும் யாற்றவும் பிறவும்" என்பதனால் அறியலாம்.

**கொடை:**

சேர மன்னர்கள் கொடையிற் சிறந்தவர்கள். செல்வக் கடுங்கோவாழியாதன் பிறருக்குப் பொருள் கொடுப்பதற்காக ஒரு நாளும் வருந்ததல் இல்லாது நிரம்பக் கொடுப்பான்.

"ஈத்தக இரங்கான் ஈத்தொறும் மகிழான்

ஈத்தொரு மா வள்ளியன்" (குமட்டூர் கண்ணனார் 220 )

இம்மன்னன் பொருள் மிகுதியாகக் கொடுத்ததனால் பொருள் செலவாயிற்றே என வருந்தாது. தன்னால் கொடுக்கப்பட வேண்டிய நிலையில் மக்கள் இருக்கின்றார்களே என நினைத்து வருந்தும் இயல்பினன் என்பதனை மேல் உள்ள பாடல் உணர்த்துகிறது. புரிசிலர் வாராச் காலத்தும் அவர்கள் இருக்கும் இடம் நாடித் தேடிப் பரிசில் வழங்கும் இயல்பினன்.

"தகைசால் வாய்மொழி இசைசால் தோன்றல்"

கொடுக்கும் மாண்பு மன்னர்க்கு மட்டுமே அமைந்த ஒன்று என்பதன்று: மக்களிடையேயும் அது சிறந்திருந்தது. பாணன் ஒருவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனிடம் சென்று பரிசு பெற்றான். பொதுவாகப் பரிசு பெற்ற பாணன் அது பெறக் கருதும் மற்றொரு பாணனைப் புரவலரிடம் ஆற்றுப் படுத்துதல் மரபு. ஆனால், இந்தப் பாணனோ தான் பெற்ற பெருவளத்தைத் தானே பரிசிலாகக் கொடுக்க முன் வருகிறான்.

**வீரம்:**

சேர மன்னர் கடற்போரில் சிறந்தவர்கள் என்ற செய்தி பல இடங்களில் கூறப்படுகிறது.

“இரு முந்நீர்த் துருத்தியுள்

முரணி யோர்த் தலைச்சென்று

கடம்புமுதல் தடிந்த கடுஞ்சின முன்பின் சேரன்”

**மனைமாட்சி:**

சேர மன்னருடைய மனைவியரது மாண்பு பல இடங்களில் உணர்த்தப்பட்டுள்ளது. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுடைய மனைவி சீற்றமே கொள்ளாதவள் என்பதும், ஊடற் காலத்திலும் இனியவற்றைக் கூறும் நீர்மையள் என்பதையும் அறியலாம்.

“சுடர்நுதல் அசைநடை உள்ளலும் உரியன்”

**மக்கள் வாழ்க்கை:**

சேர நாட்டு மக்கள் செம்மை சான்ற வாழ்வு நடத்தினர். அன்புநெறியை மேற்கொண்டு கவலையில்லாமல் பெருவாழ்வு வாழ்ந்தனர்.

“நெடுவசி பரந்த வடுவாழ் மார்பின்

அன்புசேர் உடம்பினர்”.

இவ்வாறாக பதினெண் மேற்கணக்கு நூல்கள் வாழ்வியலை விரித்தும் வாழ்க்கையின் சாராம்சத்தை சுருக்கமாகவும் சுட்டிக்காட்டும் கருவூலமாகத் திகழ்கிறது.

## துணை நூற்பட்டியல்


- அருணாசலம்.மு மற்றும் ஜெயக்குமார். பா (2011) *தமிழும் உலகச்செம்மொழிகளும்.* பூவை பப்ளிகேஷன்ஸ்.
- கணபதி வி. (2004*). தமிழ் இலக்கண இலக்கியஅறிமுகம்.* சாந்தாபப்ளிசஸ்.
- தமிழண்ணல் (2008). *இலக்கியதமிழ் வரலாறு:* மீனாட்சிபதிப்பகம்.
- வரதராசனார்.மு, (2015). *தமிழ் இலக்கியவரலாறு.* சாகித்தியஅகாடமி.

**வுலைத்தளப் பார்வை**

http://www.tamilsurangam.in/literatures/ettuthogai/index.html

https://www.keetru.com/index.php/2014-03-08-04-35-27/2014-03-08-12-18-14/2826-2010-01-29-08-13-35